winmeen.com

# இரண்டாம் வார நடப்பு நிகழ்வுகள்

## செப்டம்பர் 2022

செப்டம்பர் 08-14

**1. எந்த மாநிலத்திற்கான புதிய கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்திற்கு நடுவண் சுற்றுச்சூழல் அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது?**



அ. கேரளா

**ஆ. கர்நாடகா ☑**

இ. கோவா

ஈ. மகாராஷ்டிரா

✓ வனம், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் சமீபத்தில் கர்நாடகாவுக்கான புதிய கடலோர மண்டல மேலாண்மை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. கர்நாடகாவில் உள்ள கோல்ட்ஃபிஞ்ச் நகரத்தில் ₹3,800 கோடி மதிப்பிலான பல்வேறு பணிகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார். புதிய கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பின்படி இந்தத் திட்டத்தைத் தயாரித்து ஒப்புதல் பெற்ற தென்னிந்தியாவின் முதல் மாநிலம் மற்றும் நாட்டிலேயே இரண்டாவது மாநிலமாக கர்நாடகா உள்ளது.

**2. 2022 மார்ச் நிலவரப்படி, நிதியமைச்சகத்தின் தரவுகளின்படி, இந்தியாவின் அயல்நாட்டுக்கடன் எவ்வளவு?**



அ. $220 பில்லியன் அமெரிக்க டாலர்கள்

ஆ. $420 பில்லியன் அமெரிக்க டாலர்கள்

**இ. $620 பில்லியன் அமெரிக்க டாலர்கள் ☑**

ஈ. $820 பில்லியன் அமெரிக்க டாலர்கள்

✓ நடுவண் நிதியமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்களுக்கான துறையின் வெளிநாட்டுக் கடன் நிர்வாகப்பிரிவு இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 2021–22 குறித்த 28ஆவது நிலைமை அறிக்கையை வெளியிட்டுள்ளது. 2021 மார்ச் இறுதியில், $573.7 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த இந்தியாவின் வெளிநாட்டுக்கடன், 2022 மார்ச் இறுதியில் 8.2 சதவீதம் அதிகரித்து $620.7 பில்லியன் அமெரிக்கன் டாலர் ஆகியுள்ளது. உள்நாட்டு மொத்த உற்பத்தி விகிதத்தில் வெளிநாட்டுக்கடன் அளவு ஓராண்டுக்கு முன் 21.2 சதவீதம் என்பதிலிருந்து கணிசமாக குறைந்து 2022 மார்ச் இறுதியில், 19.9 சதவீதம் ஆகியுள்ளது.

✓ அந்நிய செலாவணி கையிருப்பு, விகிதத்தில் ஓராண்டுக்கு முன் 100.6% என்பதைவிட, 2022 மார்ச் இறுதியில் 97.8 சதவீதம் என வெளிநாட்டுக்கடன் லேசாக குறைந்துள்ளது. நீண்டகால கடன் அளவு $499. 1 பில்லியன் அமெரிக்க டாலர் என்றும், குறுகிய காலக்கடன் அளவு $121.7 பில்லியன் அமெரிக்க டாலர் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

**3. இந்தியாவின் சலுகை நிதி திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட மைத்ரீ சூப்பர் அனல்மின்திட்டத்தில் உற்பத்தியைத் தொடக்கிய நாடு எது?**



அ. இலங்கை

**ஆ. வங்காளதேசம் ☑**

இ. நேபாளம்

ஈ. மியான்மர்

✓ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா ஆகியோர் இணைந்து மைத்ரீ சூப்பர் அனல்மின் திட்டத்தின் அலகு–1–ஐ தொடக்கி வைத்தனர். இந்தத் திட்டம் இந்தியாவின் சலுகை நிதி திட்டத்தின்கீழ் கட்டமைக்கப்படுகிறது. இது வங்காளதேசத்தின் தேசிய கட்டமைப்பிற்கு 1320 மெகாவாட்களைக்கொண்டுசேர்க்கும். நீர்வளம், இரயில்வே, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விண்வெளி தொழில்நுட்பம் உள்ளிட்ட 7 ஒப்பந்தங்கள் இவ்விரு நாட்டு பிரதமர்களிடையே பரிமாறிக்கொள்ளப்பட்டன.

**4. இந்தியாவின் முதல் நாசியுள் செலுத்தப்படும் கொரோனா தடுப்பூசியான iNCOVACC–ஐ உருவாக்கிய நிறுவனம் எது?**




அ. பயோகான்


ஆ. Dr ரெட்டி ஆய்வகம்

**இ. பாரத் பயோடெக் ☑**

ஈ. இந்திய சீரம் நிறுவனம்

✓ பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அவசரகால பயன்பாட்டிற்கான நாட்டின் முதல் நாசியுள் செலுத்தப்படும் COVID–19 தடுப்பூசிக்கு இந்திய தலைமை மருந்துக்கட்டுப்பாட்டு இயக்குநரகம் ஒப்புதல் அளித்துள்ளது. 'iNCOVACC' என்று பெயரிடப்பட்ட இத்தடுப்பூசி பாரத் பயோடெக் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. இது, சீனாவின், 'CanSino Biologics' தடுப்பூசிக்குப் பிறகு, ஓர் ஒழுங்குமுறை அனுமதியைப் பெற்ற உலகின் இரண்டாவது தடுப்பூசி ஆகும். 'iNCOVACC' என்பது சிம்பன்சி அடினோவைரஸ் வெக்டார்டு மறுசீரமைப்பு நாசியுள் செலுத்தக்கூடிய தடுப்பூசி ஆகும்.

**5. முடக்கச் செயலிக்கு எதிரான சர்வதேச முனைவின் ஒருபகுதியான சைபர் பாதுகாப்புப் பயிற்சியை, இந்தியா, எந்த நாட்டுடன் இணைந்து நடத்தியது?**




அ. ஜப்பான்

ஆ. பிரான்ஸ்

**இ. இங்கிலாந்து ☑**

ஈ. ஆஸ்திரேலியா

✓ இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகமும் (NSCS) இங்கிலாந்து (UK) அரசும் BAE அமைப்புகளுடன் இணைந்து இருபத்தாறு நாடுகளுக்கு இணையவெளிப் பாதுகாப்புப் பயிற்சியை வெற்றிகரமாக நடத்தின. தேசிய இணையவெளிப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் (NCSC) தலைமையில் இந்தியாவால் நடத்தப்படும் முடக்கச் செயலிக்கு எதிரான சர்வதேச மென்பொருள் முனைவு – நெகிழ்திறன்மிக்க பணிக்குழுவின் ஒருபகுதியாக இந்தப் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

**6. 'தேசிய பெண் காவலர்கள் மாநாடு' நடைபெறும் இடம் எது?**



அ. புது தில்லி

**ஆ. லக்னோ ☑**

இ. சிம்லா

ஈ. மைசூரு

✓ ஹிமாச்சல பிரதேச மாநில காவல்துறையுடன் இணைந்து சிம்லாவில் உள்துறை அமைச்சகமும் காவல்துறை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணியகமும் (BPRD) இணைந்து இரண்டு நாள் நடைபெறும், 'தேசிய பெண் காவலர்கள் மாநாட்டை' ஏற்பாடு செய்தது. இம்மாநாட்டில் பெண் காவலர்களின் சாதனைகள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து விவாதிக்கப்படும். வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் மற்றும் குற்றங்களின் அடிப்படையில் பெண் காவலர்களின் புதிய பதவிகள் மற்றும் பொறுப்புகள் குறித்தும் இதில் விவாதிக்கப்படும்.

**7. INS சுமேதாவின் பங்கேற்புடன் இந்தியா சமீபத்தில் எந்த நாட்டுடனான, 'கடல்சார் கூட்டாண்மை பயிற்சியை (MPX)' நிறைவு செய்தது?**



அ. அமெரிக்கா

**ஆ. ஆஸ்திரேலியா ☑**

இ. பிரான்ஸ்

ஈ. ஜப்பான்

✓ இந்திய கடற்படைக்கும் இராயல் ஆஸ்திரேலிய கடற்படைக்கும் இடையிலான வலுவான தொடர்புகள் மற்றும் இயங்குநிலையை மறுவுறுதிப்படுத்தும் பயிற்சியில் HMAS அன்சாக்குடன் INS சுமேதா பங்கேற்றது. INS சுமேதா என்பது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கடற்படை கடல் ரோந்துக்கப்பல் ஆகும். 'விடுதலை அமுதப்பெருவிழா' கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக அனைத்து கண்டங்களிலும், 'மூவர்ணக்கொடி'யை ஏற்றி வைப்பது இந்திய கடற்படையின் முனைவின் ஒருபகுதியாகும்.

**8. மிகநீண்ட வறட்சியை எதிர்கொண்டு வரும் இந்தியாவின் அண்டை நாடு எது?**

அ. மியான்மர்

**ஆ. சீனா ☑**

இ. இலங்கை

ஈ. நேபாளம்



✓ ஒரு மாதத்திறக்கும் மேல் வீசிவரும் வெப்ப அலை மற்றும் குறைந்த மழைப்பொழிவு ஆகியவை சீனாவில் நீண்ட வறட்சியை அந்த நாட்டின் மிகநீளமான ஆறான யாங்சியில் ஏற்படுத்தியுள்ளது. டோங்டிங் போன்ற ஏரிகளும் கிளை ஆறுகளும் வறட்சியின் விளைவாக வற்றிப்போயுள்ளன. ஆற்றின் குறைந்த நீர்மட்டம் அப்பகுதியில் உள்ள நீர்மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தி செய்யும் திறனையும் குறைத்துள்ளது.

**9. 'உல்ச்சி ஃப்ரீடம் ஷீல்டு' என்ற பெயரில் இராணுவப் பயிற்சியை நடத்தும் நாடு எது?**

**அ. தென் கொரியா ☑**

ஆ. ஜப்பான்

இ. சீனா

ஈ. ரஷ்யா



✓ தென்கொரியாவும் அமெரிக்காவும் இணைந்து தென்கொரியாவில், 'உல்ச்சி ஃப்ரீடம் ஷீல்ட்' என்ற களப்பயிற்சியை மீண்டும் தொடங்குவதன்மூலம் தங்களின் மிகப்பெரிய இராணுவக் கூட்டணியை மறுவுறுதி செய்துள்ளன. இந்த ஆண்டு கோடைக்கால பயிற்சியானது தென் கொரிய அதிபர் யூன் சுக்–யோல் அவர்களால், 'Ulchi Freedom Shield' என அழைக்கப்பட்டது. ஒருங்கிணைந்த பயிற்சிகளை இயல்பாக்குவதே இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.

**10. அண்மையில் தொடங்கப்பட்ட, 'சில்க் மார்க் கண்காட்சி' நடைபெற்று வரும் இடம் எது?**

**அ. புது தில்லி ☑**

ஆ. சென்னை

இ. முசோரி

ஈ. காஞ்சிபுரம்

✓ நடுவண் ஜவுளித்துறை இணையமைச்சர் தர்ஷனா ஜர்தோஷ் புது தில்லியில் சில்க் மார்க் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார். ஜவுளி அமைச்சகத்தின் நடுவண் பட்டு வாரியத்தின்கீழ் உள்ள இந்திய சில்க் மார்க் அமைப்பு இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது. சில்க் மார்க் என்பது தரம் உறுதி செய்யும் லேபிள் ஆகும்; இது தயாரிப்பு ஆனது தூய இயற்கைப் பட்டால் ஆனது என்பதை தீர்மானிக்க அரசாங்கத்தால் தொடங்கப்பட்டது ஆகும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. உச்சநீதிமன்றத்தில் நடுவணரசின் வழக்குரைஞராக இராம்சங்கர் இராஜா நியமனம்**

உச்சநீதிமன்றத்தில் நடுவணரசின் தரப்பில் வழக்குரைஞராக ஆஜராக இராஜபாளையத்தை சேர்ந்த இராம் சங்கர் இராஜா நியமிக்கப்பட்டுள்ளார். நடுவணரசின் சட்டம், நீதித்துறை மற்றும் சட்ட விவகாரங்கள் துறை அமைச்சகம் உச்சநீதிமன்றத்தில் நடுவணரசின் வழக்குரைஞராக இராம்சங்கர் இராஜாவை நியமித்து அரசாணை வெளியிட்டது. இதில் அவரது பதவிக்காலம் 3 ஆண்டுகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

**2. காலை சிற்றுண்டி திட்டம்: செப். 15–இல் மதுரையில் தொடக்கம்**


காலை சிற்றுண்டி திட்டம் மதுரையில் வரும் 15–ஆம் தேதி தொடங்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தை மதுரையில் உள்ள பள்ளிகளில் முதல்வர் மு க ஸ்டாலின் தொடக்கிவைக்கிறார்.

தமிழகத்தில் மாநில அரசின் முழுமையான நிதியைக்கொண்டு காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. 1,545 அரசு தொடக்கப் பள்ளிகளைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 95 மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்துக்காக ₹33.56 கோடி ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அன்று சென்னை– இன்று மதுரை: பள்ளியில் உணவளிக்கும் திட்டம் சென்னையில் ஒரு நூற்றாண்டுக்கு முன்பே, முன்மொழியப்பட்டு மாநகராட்சி நிர்வாகத்தால் நிறைவேற்றப்பட்டது. அப்போதைய மாமன்றத்தின் தலைவராக இருந்த சர் பிட்டி தியாகராயர் தலைமையில் 1920–ஆம் ஆண்டு செப்.16–இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், இந்தியாவிலேயே முதன்முறையாக, சென்னை ஆயிரம் விளக்கு மாநகராட்சிப் பள்ளியில் மதிய உணவுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போது, நூறு ஆண்டுகளுக்குப் பிறகு அதே செப்டம்பர் மாதத்தில் காலை சிற்றுண்டி திட்டம், மதுரையில் தொடங்கப்படவுள்ளது.

---

**1. அண்மையில் தொடங்கப்பட்ட, 'நி–க்ஷய் 2.0' என்ற இணையதளத்துடன் தொடர்புடைய நோய் எது?**



அ. புற்றுநோய்

**ஆ. காசநோய் ☑**

இ. COVID-19

ஈ. இரத்த சோகை

✓ இந்தியக்குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு பிரதமர் காசநோய் (TB) முக்த் பாரத் அபியான், 'நி–க்ஷய் 2.0' என்ற இணையதளத்தை தொடங்கவுள்ளார். நடுவண் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் 2025ஆம் ஆண்டுக்குள் காசநோயை ஒழிக்க இலக்கு நிர்ணயித்துள்ளது. 'நி–க்ஷய் 2.0' என்பது காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமூக அளவிலான ஆதரவை வழங்கும் ஒரு டிஜிட்டல் தளமாகும். இது காசநோயாளிகளின் சிகிச்சை விளைவுகளை மேம்படுத்துவதற்கான கூடுதல் ஆதரவை வழங்குகிறது.

**2. இளநிலை பட்டப்படிப்பை நிறைவு செய்வதற்காக மாணவிகளுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்கும், 'புதுமைப் பெண்' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?**




**அ. தமிழ்நாடு ☑**

ஆ. ஒடிஸா

இ. கர்நாடகா

ஈ. ஆந்திர பிரதேசம்

✓ தமிழ்நாடு அரசானது மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தை, 'புதுமைப்பெண் திட்டம்' என மாற்றியமைத்துள்ளது. இளங்கலைப்பட்டம், பட்டயப்படிப்பு, ஐடிஐ அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட படிப்பைத்தொடருவதற்காக, மாணவிகளுக்கு மாதந்தோறும் ₹1,000 உதவித்தொகையை இத்திட்டம் வழங்குகிறது. அரசுப்பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் இந்த நிதியுதவி பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

**3. பிரதமர் கதி சக்தி திட்டத்திற்கு இரயில்வே நிலத்தை நீண்டகால குத்தகைக்கு விடுவதற்கான கொள்கையின்படி, நில குத்தகையானது எத்தனை ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது?**

அ. 10

ஆ. 15

இ. 25

**ஈ. 35 ☑**

✓ பிரதமரின் கதிசக்தி கட்டமைப்பு அமலாக்கத்திற்காக இரயில்வேக்கு சொந்தமான நிலத்தை நீண்டகால குத்தகைக்கு அளிப்பதற்கான கொள்கைக்கு பிரதமர் தலைமையிலான நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

✓ இதன்மூலம், இரயில்வேயின் சரக்குப் போக்குவரத்து அதிகரித்து அதன்மூலம் தொழிற்துறையின் சரக்குப் போக்குவரத்திற்கான செலவும் குறையும்; இரயில்வேக்கு அதிக வருவாய் கிடைக்கும். இக்கொள்கையின்மூலம் 1.2 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். பிரதமரின் கதிசக்தி திட்டத்தின்கீழ் அடுத்த 5 ஆண்டுகளில் 300 சரக்குப் போக்குவரத்து முனையங்கள் அமைக்கப்படும். நிலத்தின் சந்தை மதிப்பில், ஆண்டுக்கு 1.5 சதவீத வட்டியில், 35 ஆண்டுகள் வரை சரக்குப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக ரயில்வே நிலங்கள் நீண்டகால குத்தகைக்கு அளிக்கப்படவுள்ளன.

**4. செப்.9ஆம் தேதியை, 'இமயமலை வெற்றி நாள்' என்று கொண்டாடுகிற மாநிலம் எது?**

அ. பீகார்

ஆ. அஸ்ஸாம்

**இ. உத்தரகாண்ட் ☑**

ஈ. சிக்கிம்



✓ இமயமலையின் சுற்றுச்சூழலையும் பிராந்தியத்தையும் பாதுகாக்கும் நோக்கத்துடன் உத்தரகாண்ட் மாநிலத்தில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர்.9ஆம் தேதி, 'இமயமலை வெற்றி நாள்' கொண்டாடப்படுகிறது. இது கடந்த, 2015ஆம் ஆண்டில், உத்தரகாண்டின் அப்போதைய முதல்வரால் அதிகாரப்பூர்வமாக இமயமலை நாளாக அறிவிக்கப்பட்டது. கடந்த 2014ஆம் ஆண்டில், அப்போதைய முதலமைச்சர் ஹரிஷ் இராவத், இமயமலை சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்கான செய்தியைப்பரப்புவதற்காக மாநிலம் முழுவதும் செப்.9ஆம் தேதியை 'இமயமலை வெற்றி நாள்' என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

**5. மேக்னஸ் கார்ல்சனுக்கு எதிராக தனது தொழிற்முறை வாழ்வில் தொடர்ச்சியாக மூன்றாவது வெற்றியைப் பதிவு செய்த இந்திய செஸ் வீரர் யார்?**

அ. குகேஷ் D

**ஆ. பிரக்ஞானந்தா R ☑**

இ. விதித் குஜராத்தி

ஈ. நிஹால் சரின்




✓ 17 வயதான இந்திய சதுரங்க வீரர் R பிரக்ஞானந்தா தனது தொழிற்முறை வாழ்வில் நார்வே செஸ் வீரர் மேக்னஸ் கார்ல்சனுக்கு எதிராக தொடர்ந்து மூன்றாவது வெற்றியைப் பதிவுசெய்தார். FTX கிரிப்டோ கோப்பையில் தனது இறுதிப்போட்டியில் ஐந்து முறை உலக செஸ் சாம்பியனான மேக்னஸ் கார்ல்சனை பிரக்ஞானந்தா வீழ்த்தினார். இருந்தாலும், 7 சுற்றுகள் முடிவில் மேக்னஸ் கார்ல்சன் 16 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தார். பிரக்ஞானந்தா 15 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தைப் பிடித்தார்.

**6. புவிசார் குறியீடு பெற்ற, 'மிதிலா மக்கானா' பயிரிடப்படுகிற மாநிலம் எது?**

அ. ஆந்திரப் பிரதேசம்

**ஆ. பீகார் ☑**

இ. கர்நாடகா

ஈ. மேற்கு வங்கம்



✓ விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு அதிகபட்ச விலையைப்பெற உதவும் வகையில், அரசாங்கம் சமீபத்தில் 'மிதிலா மக்கானா'வுக்கு புவிசார் குறியீட்டை வழங்கியுள்ளது. இதன் தாவரவியல் பெயர், 'Euryale Ferox Salisb' ஆகும். இது ஒரு சிறப்பு வகை நீர்வாழ் தாமரைப்பொரி ஆகும். 'மிதிலா மக்கானா' பீகாரின் மிதிலா பகுதியிலும் நேபாளத்தின் சில பகுதிகளிலும் பயிரிடப்படுகிறது. பாகல்பூரின் ஜர்தாலு மாம்பழம், கதர்னி தான் (அரிசி), நவாடாவின் மாகாய் பான் மற்றும் முசாபர்பூரின் ஷாஹி லிச்சிக்குப் பிறகு புவிசார் குறியீடு பெறும் பீகாரைச் சார்ந்த ஐந்தாவது பொருள் இதுவாகும்.

**7. UN இணைய ஆளுகை கருத்துக்கள தலைமைத்துவ அரங்கிற்கு நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?**

**அ. அல்கேஷ் குமார் சர்மா ☑**

ஆ. நந்தன் நிலேகனி

இ. K V காமத்

ஈ. கிரிஸ் கோபாலகிருஷ்ணன்



✓ ஐநா பொதுச்செயலர் அன்டோனியோ குட்டெரெஸ், இந்திய மூத்த அதிகாரி அல்கேஷ் குமார் சர்மாவை இணைய ஆளுமை கருத்துக்களத்தின் தலைமைத்துவ குழுவில் சேர்த்துள்ளார். உலகெங்கிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 10 புகழ்பெற்ற டிஜிட்டல் ஆளுமை நிபுணர்களில் அவரும் ஒருவர். அவர் ராஜஸ்தானை சேர்ந்த 1990 பேட்ச் ஐஏஎஸ் அதிகாரியும் அமைச்சரவை செயலகத்தில் முன்னாள் செயலாளராகவும் உள்ளார். அவர் இதற்கு முன்னர் UNDPஇல் நகர்ப்புற மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்புக்கான தேசிய திட்ட இயக்குநராக பணியாற்றியுள்ளார்.

**8. தேசிய குடும்பநல கணக்கெடுப்பு 2019–21'இன்படி, இந்தியாவில் பிறப்பின் போதான பாலின விகிதம் என்ன?**

அ. 110

**ஆ. 108 ☑**

இ. 105

ஈ. 101




✓ பியூ ஆராய்ச்சி மையத்தின் சமீபத்திய ஆய்வின்படி, இந்தியாவில் பிறக்கும்போது நிலவும் பாலின விகிதம், ஒவ்வொரு 100 ஆண் குழந்தைகளுக்கும் பிறக்கும் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை, சற்று சீராக உள்ளது. 2015–16இல் 100 பெண் குழந்தைகளுக்கு 109 ஆண் குழந்தைகளாக இருந்த பாலின விகிதம், 2019–21இல் 100 பெண் குழந்தைகளுக்கு 108 ஆண் குழந்தைகளாக குறைந்துள்ளது என்று தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு 2019–21இன் தரவு காட்டுகிறது. இந்தியாவில், 'காணாமல் போகும்' பெண் குழந்தைகளின் சராசரி ஆண்டு எண்ணிக்கை 2010இல் இருந்த சுமார் 4.8 இலட்சத்திலிருந்து 2019இல் 4.1 இலட்சமாகக் குறைந்துள்ளது.

**9. ஆசியாவின் மிகப்பெரிய அழுக்கப்பட்ட உயிரிவாயு ஆலை தொடங்கப்பட்டுள்ள மாநிலம்/UT எது?**

**அ. பஞ்சாப் ☑**

ஆ. கேரளா

இ. சத்தீஸ்கர்

ஈ. ஆந்திர பிரதேசம்




✓ பஞ்சாபின் சங்ரூர் மாவட்டத்தில் உள்ள ஆசியாவின் மிகப்பெரிய அழுக்கப்பட்ட உயிரிவாயு ஆலையானது சமீபத்தில் அதன் வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கியது. இந்திய எண்ணெய் நிறுவன விற்பனை நிலையத்திற்கு இந்த உயிரி வாயு விநியோகம் செய்யப்படுகிறது. எரித்தலைத் தடுக்கும் நோக்கோடு பஞ்சாப் ஆற்றல் மேம்பாட்டு நிறுவனமானது 42 கூடுதல் அழுக்கப்பட்ட உயிரிவாயு திட்டங்களை நெல் வைக்கோல் மற்றும் பிற விவசாய மீதங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கவுள்ளது.


**10. உலகளாவிய AI உச்சிமாநாட்டை நடத்தும் நாடு எது?**

அ. ஆஸ்திரேலியா

**ஆ. சவூதி அரேபியா ☑**

இ. பிரான்ஸ்

ஈ. ஸ்பெயின்




✓ சவூதி அரேபியாவானது இந்த ஆண்டு (2022) செப்டம்பரில் உலகளாவிய AI உச்சிமாநாட்டின் இரண்டாவது பதிப்பை, "மனிதகுலத்தின் நன்மைக்கான செயற்கை நுண்ணறிவு" என்ற கருப்பொருளின்கீழ் ஏற்பாடு செய்ய உள்ளது. நடக்கவிருக்கும் இந்த நிகழ்வில் உலகெங்கிலும் உள்ள அரசு நிறுவனங்கள் மற்றும் முக்கிய தொழில்நுட்ப நிறுவனங்களின் வல்லுநர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது நமக்கு முன்னிருக்கும் சவால்களுக்குத் தீர்வு காண்பது மற்றும் AI தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை அதிகப்படுத்துவதுபோன்ற பல்வேறு தலைப்புகளில் இதன் சமயம் விவாதம் நடைபெறும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நியூசிலாந்துக்கான புதிய இந்தியத் தூதர் நியமனம்**

நியூசிலாந்து நாட்டுக்கான புதிய இந்தியத்தூதராக, வெளியுறவுப்பணி மூத்த அதிகாரி நீத்தா பூஷண் நியமனம் செய்யப்பட்டார். கடந்த 1994–ஆம் ஆண்டு பிரிவு இந்திய வெளியுறவுப்பணி அதிகாரியான இவர், தற்போது வெளியுறவு அமைச்சகத்தின் மத்திய ஐரோப்பிய நாடுகளுக்கான கூடுதல் செயலாளராக உள்ளார்.

நியூசிலாந்துக்கான இந்தியத்தூதராக இருந்த முக்தேஷ் பர்தேசிக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு, G20 கூட்டமைப்புக்–கான இந்திய செயலகத்தின் தலைமைப் பொறுப்பில் நியமிக்கப்பட்டார். இதையடுத்து, நியூசிலாந்துக்கான இந்தியத் தூதராக நீத்தா பூஷண் நியமிக்கப்பட்டுள்ளார். இவர், வங்கதேச தலைநகர் டாக்காவில் உள்ள இந்திய தூதரகத்தின் பத்திரிகை, கலாசாரம், தகவல் பிரிவு தலைவராகப் பணியாற்றியவர். இதேபோல், ஜெர்மனியில் உள்ள இந்தியத் தூதரகத்தின் பொருளாதார மற்றும் வர்த்தகப் பிரிவுக்கும் தலைமை தாங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**1. UNDPஇன் 2021ஆம் ஆண்டுக்கான மனித வளர்ச்சிக்குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?**

அ. 121

ஆ. 125

இ. 129

**ஈ. 132 ☑**

132

✓ 2021ஆம் ஆண்டுக்கான மனித வளர்ச்சிக்குறியீட்டில் (HDI) 191 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் இந்தியா 132ஆவது இடத்தைப்பிடித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தின் (UNDP) அறிக்கையின்படி, ஆயுட்காலம் வீழ்ச்சியடைவதால், நாட்டின் செயல்திறன் அதன் முந்தைய நிலையிலிருந்து சற்றே சரிந்துள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டின் அறிக்கையில், 189 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் இந்தியா 131ஆவது இடத்தில் இருந்தது.

**2. அண்மையில், 'டைமண்ட் லீக் சாம்பியன்' ஆன இந்திய விளையாட்டு வீரர்/வீராங்கனை யார்?**

அ. P V சிந்து

**ஆ. நீரஜ் சோப்ரா ☑**

இ. H S பிரணாய்

ஈ. ஹிமா தாஸ்



✓ நீரஜ் சோப்ரா 88.44 மீ தூரத்துக்கு ஈட்டியெறிந்து, இந்தியாவிலிருந்து 'டைமண்ட் கோப்பையை' வெல்லும் முதல் வீரர் என்ற வரலாற்றுச்சாதனையைப் படைத்தார். நீரஜ் சோப்ரா இதற்கு முன், 89.08 மீட்டர் தூரம் ஈட்டியெறிந்து 'லொசேன் டைமண்ட்' லீக்கை வென்றிருந்தார். ஜூலை மாதம் நடந்த உலக சாம்பியன்ஷிப் போட்டியில், அவர், 89.30 மீட்டர் தூரம் ஈட்டியெறிந்து வரலாற்றுச் சிறப்புமிக்க வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

**3. 2022ஆம் ஆண்டிற்கான பார்ச்சூன் இந்தியாவின், 'இந்தியாவின் செல்வந்தர்கள்' பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்த வணிகர் யார்?**

அ. முகேஷ் அம்பானி

**ஆ. கௌதம் அதானி ☑**

இ. சைரஸ் பூனாவாலா

ஈ. ஆதி கோத்ரெஜ்



✓ பார்ச்சூன் இந்தியாவின் 2022ஆம் ஆண்டிற்கான, 'இந்தியச் செல்வந்தர்கள்' பட்டியலின்படி, கௌதம் அதானி ₹10.29 டிரில்லியன் சொத்துக்களுடன் முதலிடத்தில் உள்ளார். இந்தியாவில் உள்ள 142 பில்லியனர்களின் சொத்து மதிப்பு $832 பில்லியன் அமெரிக்க டாலர்கள் (₹66.36 டிரில்லியன்) ஆகும். ஃபோர்ப்ஸ் பத்திரிக்கையின் நிகழ்நேர பில்லியனர்கள் பட்டியலின்படி, ஆசியாவின் மிகப்பெரிய பணக்காரரான கௌதம் அதானி அண்மையில் அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸை விஞ்சி உலகின் மூன்றாவது பெருஞ்செல்வந்தர் ஆனார்.

**4. 'குடியிருப்புப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டம்' என்ற பல்நோக்கு இணையதளத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?**

அ. மேற்கு வங்காளம்

**ஆ. மேகாலயா ☑**

இ. சிக்கிம்

ஈ. ஒடிஸா



- ✓ மேகாலயா மாநில அரசு, "மேகாலயா குடியிருப்பாளர்கள் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டம்" என்ற பல்நோக்கு இணையதளத்தை அறிமுகப்படுத்தியது. இந்த டிஜிட்டல் மயமாக்கல் செயல்முறையானது மேகாலயா முழுவதும் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் மற்றும் உள்ளாட்சிகளை இந்த இணையதள அமைப்புடன் இணைக்கும். இது குடியிருப்பாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதை நோக்கமாகக்கொண்டுள்ளது. மேலும், பல்வேறு அரசாங்க சேவைகளை சிறப்பாக வழங்குவதற்காக உளவுத்துறையின் தகவல்களையும் இது பயன்படுத்துகிறது.


**5. நாட்டின் முதல், 'கல்வி நகரத்தை' உருவாக்கவுள்ள மாநிலம்/UT எது?**

அ. கேரளா

ஆ. கர்நாடகா

இ. பஞ்சாப்

**ஈ. உத்தர பிரதேசம் ☑**



- ✓ உத்தரபிரதேச மாநிலத்தில், 'கல்வி நகரத்தை' உருவாக்கவுள்ளதாக அம்மாநில அரசு அறிவிப்பு செய்துள்ளது. இந்த நடவடிக்கை இளையோர்க்கு உயர்தர கல்வியை வழங்குவதோடு, ஒரே இடத்தில் பலவிதமான தொழிற்முறை திறன்களுடன் அவர்களை சித்தப்படுத்துகிறது. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தங்குமிடம் மற்றும் இதர வசதிகளையும் இந்தக் 'கல்வி நகரம்' வழங்கும்.

**6. எந்த மாநிலம்/UTஇல், ஆசியாவின் மிகப்பெரிய தனியார் மருத்துவமனையை பிரதமர் திறந்து வைத்தார்?**

அ. ஆந்திரப் பிரதேசம்

**ஆ. ஹரியானா ☑**

இ. கர்நாடகா

ஈ. மேற்கு வங்கம்



- ✓ ஹரியானா மாநிலம் பரிதாபாத்தில் அமைந்துள்ள அமிர்தா மருத்துவமனையை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார். இது மாதா அமிர்தானந்தமயி மடத்தின் நிதியுதவியுடன் ஆறாண்டு காலத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 81 சிறப்புத்துவங்களைக் கொண்ட இந்த மருத்துவமனை, இந்தியா மற்றும் ஆசியாவிலேயே மிகப்பெரிய தனியார் மருத்துவமனை என்ற சிறப்பை கொண்டுள்ளது. இது ஒரு பிரத்யேக ஏழு–அடுக்கு ஆராய்ச்சித்தொகுதி மற்றும் எட்டுச் சிறப்பு மையங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

**7. 'சைலிட்டால்' என்ற சர்க்கரை மாற்றீட்டை உற்பத்தி செய்வதற்கான நொதித்தல் முறையை உருவாக்கியுள்ள நிறுவனம் எது?**

அ. IISc பெங்களூரு

**ஆ. ஐஐடி கௌகாத்தி ☑**

இ. ஐஐடி மெட்ராஸ்

ஈ. NIT வரங்கல்



- ✓ ஐஐடி கௌகாத்தியைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் மீயொலி உதவியுடனான நொதித்தல் முறையை உருவாக்கி 'சைலிட்டால்' என்ற சர்க்கரை மாற்றீட்டை உருவாக்கியுள்ளனர். கரும்புகளை பிழிந்த பின் எஞ்சியிருக்கும் கரும்புச் சக்கையிலிருந்து இது உருவாக்கப்படுகிறது. இந்தத் தயாரிப்பு இரசாயன தொகுப்பு முறைகளின் வரம்புகள் மற்றும் பாரம்பரிய நொதித்தல் முறையுடன் தொடர்புடைய நேர தாமதங்களையும் சமாளிக்கிறது. இது நீரழிவு எதிர்ப்பு மற்றும் உடற்பருமன் எதிர்ப்பு விளைவுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

**8. தனது, 'பாதணிகள் மற்றும் தோல் பொருட்கள் கொள்கை – 2022'ஐ வெளியிட்டுள்ள மாநிலம் எது?**

**அ. தமிழ்நாடு ☑**

ஆ. மேற்கு வங்காளம்

இ. ஒடிஸா

ஈ. கர்நாடகா

✓ தமிழ்நாடு தனது, 'பாதணிகள் மற்றும் தோல் தயாரிப்புக்கொள்கை – 2022'ஐ பாதணி மற்றும் தோல் தொழிற்துறை மாநாட்டில் அறிமுகப்படுத்தியுள்ளது. தேசிய தோல் தொழிற்துறை உற்பத்தியில் 26 சதவீதமும், ஏற்றுமதியில் 48 சதவீதமும் தமிழ்நாட்டின் பங்காகும். இக்கொள்கையானது பாதணி மற்றும் தோல் பொருட்கள் (FLP) உற்பத்திக்கான சிறப்புப் பொதியையும் FLP வடிவமைப்பு அரங்குகளுக்கான ஊக்கத்தொகையையும் வழங்கும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின், இராணிப்பேட்டையில், ₹400 கோடி மதிப்பிலான பிரம்மாண்ட பாதணி உற்பத்திப் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார்.

**9. சமீபத்தில் வெளியிடப்பட்ட, "New India: Selected Writings 2014–19" என்பது கீழ்க்காணும் எந்தத் தலைவருடைய கட்டுரைகளின் தொகுப்பு நூலாகும்?**

அ. சுஷ்மா சுவராஜ்

**ஆ. அருண் ஜெட்லி ☑**



இ. மனோகர் பாரிக்கர்

ஈ. அடல் பிஹாரி வாஜ்பாய்

✓ இந்தியாவின் முன்னாள் துணைக்குடியரசுத்தலைவர் வெங்கையா, "New India: Selected Writings 2014–19" என்ற நூலை வெளியிட்டார். 2014 முதல் 2019 வரை இந்திய அரசின் நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சராக பணியாற்றிய அருண் ஜெட்லி எழுதிய கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்த நூல், அருண் ஜெட்லியின் மூன்றாவது நினைவு நாளின்போது வெளியிடப்பட்டது.

**10. அகதிகளை வரவேற்கும் முனைவுகளை அங்கீகரிக்கும் வகையில், 2022ஆம் ஆண்டுக்கான UNESCOஇன் அமைதிப்பரிசைப் பெற்றவர் யார்?**

அ. ஜோ பிடன்

ஆ. நரேந்திர மோடி

**இ. ஏஞ்சலா மேர்க்கல் ☑**



ஈ. வோலோடிமிர் ஜெலென்ஸ்கி

✓ ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மேர்க்கெல், நடப்பு 2022ஆம் ஆண்டுக்கான UNESCO அமைதிப்பரிசைப் பெற்றார். "அகதிகளை வரவேற்பதில் அவர் மேற்கொண்ட முனைவுகளை அங்கீகரிக்கும் வகையில்" அவருக்கு இந்தப் பரிசு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2015ஆம் ஆண்டில், 1.2 மில்லியனுக்கும் அதிகமான புலம்பெயர்ந்தோரை, குறிப்பாக சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் எரித்திரியாவைச் சேர்ந்தோரை வரவேற்கும், 'துணிச்சலான' முடிவிற்காக ஃபெலிக்ஸ் ஹூப்ஹவுட்–போய்க்னி–யுனெஸ்கோ அமைதிப்பரிசை அவர் பெற்றார்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. டைமண்ட் லீக்: வரலாறு படைத்த நீரஜ் சோப்ரா**

டைமண்ட் லீக் போட்டியில் ஈட்டியெறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் தடகளப்பிரிவில் இந்திய ஈட்டியெறிதல் வீரர் நீரஜ் சோப்ரா தங்கப்பதக்கம் வென்றார். இறுதிச்சுற்றில் அவர் 87.58 மீ. தூரம் எறிந்து முதலிடம் பிடித்தார். அமெரிக்காவில் நடைபெற்ற உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் ஈட்டியெறிதல் இறுதிச்சுற்றில் 88.13 மீ தூரத்துக்கு ஈட்டியை எறிந்து 2ஆம் இடம்பிடித்து வெள்ளிப்பதக்கத்தை வென்றார். உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கம் வென்ற 2ஆவது இந்தியர் நீரஜ் சோப்ரா. 2003இல் பாரிஸில் அஞ்சு பாபி ஜார்ஜ் வெண்கலம் வென்றார். பிறகு இங்கிலாந்தில் நடைபெற்ற காமன்வெல்த் போட்டிகளில் நீரஜ் சோப்ரா காயம் காரணமாகப் பங்கேற்கவில்லை.

கடந்த மாத இறுதியில் ஸ்விட்சர்லாந்தின் லுசானேவில் நடைபெற்ற டைமண்ட் லீக் போட்டியில் பங்கேற்றார் நீரஜ் சோப்ரா. இந்தப் போட்டியில் 89.08 மீ. தூரத்துக்கு ஈட்டியை எறிந்து முதலிடம் பெற்றார். இந்தப் போட்டியின் முடிவில் முதல் ஆறு இடங்களைப் பிடித்த வீரர்கள், ஜூரிச்சில் நடைபெற்ற டைமண்ட் லீக் போட்டியின் இறுதிச்சுற்றில் பங்கேற்றார்கள். டைமண்ட் லீக் இறுதிச்சுற்றுக்குத் தகுதி பெற்றதுடன் 2023இல் ஹங்கேரியில் நடைபெறவுள்ள உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டிக்கும் தகுதியடைந்தார் நீரஜ் சோப்ரா.

இந்நிலையில் ஜூரிச்சில் நடைபெற்ற டைமண்ட் லீக் போட்டியின் இறுதிச்சுற்றில் இந்திய ஈட்டியெறிதல் வீரர் நீரஜ் சோப்ரா முதலிடம் பெற்று சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். இந்தப்போட்டியில் 88.44 மீ தூரத்துக்கு ஈட்டியை எறிந்து முதலிடம் பெற்றார். டைமண்ட் லீக் போட்டியில் முதல்முறையாக சாம்பியன் ஆகியுள்ளார் 24 வயது நீரஜ் சோப்ரா. 2017இல் 7ஆவது இடமும் 2018இல் 4ஆவது இடமும் பெற்றார். முதலிடம் பெற்ற நீரஜ் சோப்ராவுக்கு ₹23.85 லட்சம் பரிசுத்தொகை கிடைத்துள்ளது. உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற ஆண்டர்சன் பீட்டர்ஸ் காயம் காரணமாக இப்போட்டியில் கலந்துகொள்ளவில்லை.

டைமண்ட் லீக் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் இந்தியர் என்கிற பெருமையைப் பெற்றுள்ளார் நீரஜ் சோப்ரா. ஒலிம்பிக்ஸ், உலக சாம்பியன்ஷிப் போன்ற போட்டிகளுக்கு அடுத்ததாகப் பெரிய போட்டியாக டைமண்ட் லீக் கருதப்படுகிறது. கடந்த 13 மாதங்களில் ஒலிம்பிக்ஸில் தங்கம், உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளி, டைமண்ட் லீக் சாம்பியன் என மூன்று சாதனைகளை நீரஜ் சோப்ரா படைத்துள்ளார்.

**1. 'EU–இந்தியா பசுமை ஹைட்ரோஜன் கருத்துக்களத்தை' ஏற்பாடு செய்த நடுவண் அமைச்சகம் எது?**

அ. எரிசக்தி அமைச்சகம்

**ஆ. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ☑**

இ. வெளியுறவு அமைச்சகம்

ஈ. வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்

✓ முதலாவது EU–இந்தியா பசுமை ஹைட்ரஜன் கருத்துக்களமானது ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டது. இது இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு (CII) மற்றும் ஹைட்ரஜன் ஐரோப்பாவின் ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்டது. ஹைட்ரஜன் மற்றும் பன்னாட்டு ஹைட்ரஜன் வர்த்தகம் தொடர்பான கூட்டுத்திட்டங்களைப்பற்றி விவாதிக்கும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றிய–இந்திய வணிகங்களை இந்த நிகழ்வு ஒன்றிணைத்தது.

**2. நீதிபதி இரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையில் சீரான உரிமையியல் நடைமுறைத் தொகுப்பு (Uniform Civil Code) குழுவை அமைத்துள்ள மாநிலம் எது?**

அ. குஜராத்

ஆ. உத்தர பிரதேசம்

**இ. உத்தரகாண்ட் ☑**

ஈ. கர்நாடகா

✓ சீரான உரிமையியல் நடைமுறைத் தொகுப்பைத் தயாரிப்பதற்காக, ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி இரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையில் குழுவொன்றை உத்தரகாண்ட் மாநில அரசு அமைத்துள்ளது. இந்தக் குழு சமீபத்தில் மக்களிடமிருந்து கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற ஓர் இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. உத்தரகாண்ட் மாநில மக்கள், இந்த இணையதளத்தில் உள்நுழைந்து தங்கள் ஆலோசனைகள், குறைகள் மற்றும் புகார்களைப் பகிர்ந்துகொள்ளலாம்.

**3. Qimingxing–50 என்பது கீழ்க்காணும் எந்த நாட்டின் முதல் முழுவதும் சூரிய ஆற்றலில் இயங்கும் ஆளில்லா வான்வழி வாகனத்தின் பெயராகும்?**

அ. ஜப்பான்

ஆ. இஸ்ரேல்

**இ. சீனா ☑**

ஈ. தென் கொரியா



✓ சீனா தனது முதல் முழுவதும் சூரிய ஆற்றலில் இயங்கும் ஆளில்லா வான்வழி வாகனத்தை (UAV) வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளது. 'Qimingxing–50' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த UAV பல மாதங்கள் பறக்கக்கூடியது ஆகும் மற்றும் தேவைப்பட்டால் செயற்கைக்கோளாக கூட செயல்படும். இது சூரிய ஆற்றலால் மட்டுமே இயக்கப்படும் முதல் பேரளவிலான UAV ஆகும். இந்தத் தொழில்நுட்பம் சீனாவின் தற்காப்புத் திறமையை ஊக்குவிக்கும் விதத்தில் உள்ளது. இது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் வானூர்தி பொறியியல் துறையிலும் பயன்படுத்தப்படலாம்.

**4. இந்தியாவில் நிலையான கடலோர மேலாண்மை குறித்த முதல் தேசிய மாநாட்டை நடத்தும் மாநிலம் எது?**

அ. கோவா ஆ. மகாராஷ்டிரா

**இ. ஒடிஸா ☑** ஈ. கேரளா

✓ நடுவண் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், ஒடிஸா மாநிலத்தின் புவனேசுவரத்தில் இந்தியாவில் நிலையான கடலோர மேலாண்மை குறித்த முதல் தேசிய மாநாட்டை தொடங்கி

வைத்தார். இந்த மாநாடு இந்தியாவின் கடலோர சமூகங்களின் காலநிலை நெகிழ்தன்மையை மேம்படுத்துவதில் கவனஞ்செலுத்தியது. கடலோர மற்றும் கடல்சார் பல்லுயிர், காலநிலை தணிப்பு மற்றும் தழுவல் மற்றும் கடலோர மாசுபாடு ஆகிய மூன்று ஒன்றோடொன்று தொடர்புடைய கருப்பொருள்களை மையமாகக்கொண்டு இந்த மாநாடு நடத்தப்பட்டது. இதில் இந்தியாவின் 13 கடலோர மாநிலங்களிலிருந்தும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**5. இந்தியாவின் மிக நீளமான இரப்பர் அணையான, 'கயாஜி அணை' திறக்கப்பட்ட மாநிலம்/UT எது?**



அ. சிக்கிம்

ஆ. ஒடிஸா

இ. அருணாச்சல பிரதேசம்

**ஈ. பீகார் ☑**

✓ ஃபல்கு ஆற்றின்மீது கட்டப்பட்டுள்ள இந்தியாவின் மிகநீளமான இரப்பர் அணையான, 'கயாஜி அணை'யை பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ் குமார் திறந்து வைத்தார். இது ஒரு பரந்த மணல் திட்டு ஆகும். பித்ரிபக்ஷ மேளாவின் போது வருகைதரும் பார்வையாளர்களின் வசதிக்காக ஸ்டீல் ஃபுட் ஓவர் பாலத்தையும் அவர் திறந்து வைத்தார். ஐஐடியின் (ரூர்க்கி) வழிகாட்டுதலுடன் ₹324 கோடி மதிப்பீட்டில் இந்த அணை கட்டப்பட்டுள்ளது.

**6. உலகின் முதல் ஹைட்ரஜனில் இயங்கும் பயணிகள் இரயில்களை அறிமுகப்படுத்திய நாடு எது?**



அ. இந்தியா

ஆ. அமெரிக்கா

இ. சீனா

**ஈ. ஜெர்மனி ☑**

✓ மின்மயமாக்கப்படாத தடங்களில் இயக்கப்பட்ட 15 டீசல்பொறி இரயில்களுக்குப் பதிலாக, ஜெர்மனி உலகின் முதல் ஹைட்ரஜனில் இயங்கும் பயணிகள் இரயிலை அறிமுகப்படுத்தியது. $92 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான இந்தத் திட்டத்தின்கீழ், 14 இரயில்கள் ஹைட்ரஜன் எரிபொருள் மின்கலங்களைப் பயன்படுத்தி தனக்கான எரிசக்தி முழுவதையும் தயாரிக்கின்றன. பிரெஞ்சு நிறுவனமான அல்ஸ்டாமால் தயாரிக்கப்பட்ட இந்த இரயில்கள் பிராந்திய இரயில் நிறுவனத்தால் இயக்கப்படுகின்றன.

**7. இந்தியாவின் முதல் 3D முறையில் அச்சிடப்பட்ட அஞ்சல் அலுவலகம் அமைக்கப்படவுள்ள நகரம் எது?**



அ. சென்னை

**ஆ. பெங்களூரு ☑**

இ. கொச்சின்

ஈ. ஹைதராபாத்

✓ இந்தியாவின் முதல் முப்பரிமாண (3D) முறையில் அச்சிடப்பட்ட அஞ்சல் அலுவலகமானது ஒருமாத காலத்திற்குள் பெங்களூரு நகரத்தில் அமையவுள்ளது. 3D முறையில் அச்சிடப்பட்ட இந்த அஞ்சல் அலுவலகம், கட்டுமானச்செலவை ¼ ஆகக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகமானது இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் கட்டுமானத்தை லார்சன் & டூப்ரோ (L&T) நிறுவனம் மேற்கொள்ளும்.

**8. இந்தியா தூய காற்று உச்சிமாநாட்டின் நான்காவது பதிப்பு நடைபெறும் இடம் எது?**

அ. புது தில்லி ஆ. காந்தி நகர்

**இ. பெங்களூரு ☑** ஈ. ஜெய்ப்பூர்

ICAS India Clean Air Summit

✓ இந்தியா தூய காற்று உச்சிமாநாட்டின் (India Clean Air Summit) நான்காவது பதிப்பு பெங்களூருவில் தொடங்கியது. காற்று மாசுபாடு குறித்த ஆய்வுகளுக்கான மதியுரையக மையம் (CAPS) மற்றும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கொள்கை ஆய்வுமையம் ஆகியவற்றால் இந்த உச்சிமாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உலகின் பல்வேறு பகுதிகளைச்சேர்ந்த பல்வேறு வல்லுநர்கள் வளி மாசுபாடு மற்றும் காலநிலை மாற்றத்திற்குத் தீர்வுகாண்பதற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பற்றி இதன்சமயம் விவாதிக்கவுள்ளனர்.

**9. பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் (BPCL) எந்தத் துணை நிறுவனம் BPCLஉடன் இணைக்கப்பட்டுள்ளது?**

**அ. பாரத் எரிவாயு வளங்கள் நிறுவனம் ☑**

ஆ. பாரத் பெட்ரோலிய வளங்கள் நிறுவனம்

இ. பெட்ரோநெட் LNG நிறுவனம்

ஈ. இந்திரபிரஸ்தா எரிவாயு நிறுவனம்

✓ பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் (BPCL) 100 சதவீத துணை நிறுவனமான பாரத் எரிவாயு வளங்கள் நிறுவனம் (BGRL) அதன் தாய் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மத்திய பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகமானது இந்த நிறுவன இணைப்புக்கு ஒப்புதலளித்து ஆணை பிறப்பித்துள்ளது. இவ்விணைப்புத்திட்டமானது கடந்த ஆகஸ்ட் மாதம் 16ஆம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது.

**10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, அர்ஜுன் எரிகைசி என்பவருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ. கபடி

ஆ. டென்னிஸ்

**இ. சதுரங்கம் ☑**

ஈ. கூடைப்பந்து



✓ இந்தியாவின் கிராண்ட் மாஸ்டர் அர்ஜுன் எரிகைசி, அபுதாபி மாஸ்டர்ஸ் செஸ் பட்டத்தை இரண்டு தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற்று வென்றுள்ளார். நிகழ்நேரத் தரவரிசையின்படி, அர்ஜுன் எரிகைசி அவர்கள் விஸ்வநாதன் ஆனந்த் (12ஆவது) மற்றும் D குகேஷ் (20ஆவது) ஆகியோருக்கு அடுத்தபடியாக 24ஆம் இடத்திலும், இந்தியர்களில் மூன்றாவது இடத்திலும் உள்ளார்.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. IIT மெட்ராஸ் IBM IBM நிறுவனத்தின் குவாண்டம் நெட்வொர்க்கில் இணைந்து செயல்படுகிறது**

இந்தியாவில் குவாண்டம் கம்ப்யூட்டிங்கில் திறன்மேம்பாடு மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்தும் நோக்கில், இந்திய தொழில்நுட்பக் கழகம் சென்னை (IIT மெட்ராஸ்) முதலாவது இந்தியக் கல்வி நிறுவனமாக IBM குவாண்டம் நெட்வொர்க்கில் இணைந்திருப்பதாக IBM அறிவித்துள்ளது.

IBM குவாண்டம் நெட்வொர்க்கில் அங்கம் வகிப்பவர் என்ற முறையில், IBM நிறுவனத்தின் அதிநவீன குவாண்டம் கம்ப்யூட்டிங் சிஸ்டம், IBM–ன் குவாண்டம் நிபுணத்துவம் ஆகியவற்றுக்கான கிளவுட் அடிப்படையிலான இணைப்பு IIT மெட்ராஸுக்கு கிடைக்கும். இதன்மூலம் நடைமுறைப் பயன்பாடுகளை ஆராயவும், வணிகம் & சமுதாயத்திற்கு இந்தத் தொழில்நுட்பத்தின் பரந்த நன்மைகளை உணரச் செய்யவும் முடியும்.

குவாண்டம் இயந்திரக்கற்றல், குவாண்டம் மேம்பாடு, நிதி தொடர்பான பயன்பாட்டு ஆராய்ச்சி உள்ளிட்ட ஆராய்ச்சிப் பணிகளில் முக்கிய வழிமுறைகளை முன்னெடுக்க IIT மெட்ராஸின் குவாண்டம், தகவல், தொடர்பு மற்றும் கம்ப்யூட்டிங் மையம் (Centre for Quantum Information, Communication and Computing–CQuICC) கவனம் செலுத்தும்.

குவாண்டம் வழிமுறைகள், குவாண்டம் இயந்திரக் கற்றல், குவாண்டம் பிழை திருத்துதல் மற்றும் பிழைகளைக் குறைத்தல், குவாண்டம் டோமோகிராபி, குவாண்டம் வேதியியல் போன்ற அம்சங்களில் IBM குவாண்டம் சேவையுடன், ஓபன் சோர்ஸ் முறையிலான கிஸ்கிட் (Qiskit) கட்டமைப்பையும் ஐஐடி மெட்ராஸ் பயன்படுத்திக் கொள்ளும். நாட்டில் குவாண்டம் கம்ப்யூட்டிங் சுற்றுச்சூழலை மேம்படுத்தி வளர்க்கும் பணியில் ஈடுபடும். குவாண்டம் கம்ப்யூட்டிங் பயன்பாடு தொடர்பான ஆராய்ச்சியை இந்தியாவிற்கு பொருத்தமாக உள்ள களங்களில் IIT மெட்ராஸ் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொள்ளும் வகையில் IBM ரிசர்ச் இந்தியா தனது ஆதரவை வழங்கும்.

---

**2. 11–09–2022 – 'மகாகவி' பாரதியாரின் 101ஆவது நினைவுநாள்.**

**பாரதியார் நினைவு நாள் மகாகவி நாள்: தமிழ்நாடு அரசு**

மகாகவி பாரதியாரின் நினைவு நாள் (செப்டம்பர்.11) 'மகாகவி' நாளாக கடைப்பிடிக்கப்பட்டது. 'மகாகவி' பாரதியார் கடந்த 1921–ஆம் ஆண்டு செப்டம்பர்.11–ஆம் தேதி மறைந்தார். அவரது மறைந்த நூற்றாண்டின் நினைவாக 14 முக்கிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அவற்றில், பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர்.11–ஆம் தேதி, 'மகாகவி' நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என்பதும் ஒன்றாகும்.

---

**3. முதுபெரும் தொல்பொருள் ஆய்வாளர் பி பி லால் காலமானார்**

இந்தியாவின் முதுபெரும் தொல்பொருள் ஆய்வாளர் பி பி லால், 10–09–2022 அன்று காலமானார். அவருக்கு வயது 101. கடந்த 1921ஆம் ஆண்டு உத்தரபிரதேச மாநிலம், ஜான்சி பகுதியில் பிறந்தவர் பிபி லால். 1968ஆம் ஆண்டு முதல் 1972ஆம் ஆண்டு வரை இந்திய தொல்லியல் துறையின் தலைமை இயக்குநராகப் பொறுப்பு வகித்தார். அந்தத் துறையின் இளவயது தலைமை இயக்குநர்களில் ஒருவராக இருந்தார். உத்தர பிரதேச மாநிலம், அயோத்தியில் தற்போது இராமர் கோயில் கட்டப்பட்டுவரும் இடத்தில், 1970ஆம் ஆண்டுகளில் அகழ்வாராயச்சி மேற்கொண்டபோது கோவில்போன்ற தூண்களைக் கண்டறிந்தார். ஹரப்பா நாகரிகம் மற்றும் மகாபாரதத்துடன் தொடர்புள்ள தொல் பொருள் தளங்களில் விரிவாகப் பணியாற்றினார். தொல்லியல் துறைக்கு அளித்த பங்களிப்புக்காக அவருக்கு கடந்த 2000ஆம் ஆண்டு 'பத்ம பூஷண்' விருதும், கடந்த ஆண்டு 'பத்ம விபூஷண்' விருதும் அளிக்கப்பட்டது.

---

**4. யுஎஸ் ஓபன் சாம்பியன் ஸ்வியாடெக்**

நியூயார்க்கில் நடந்த US ஓபன் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் சாம்பியன் பட்டம் வென்ற போலந்தின் இகா ஸ்வியாடெக். உலகின் நம்பர் 1 வீராங்கனையான ஸ்வியாடெக் 6–2, 7–6 என்ற நேர்செட்களில் துனிசியாவின் ஆன்ஸ் ஜாபியுரை வீழ்த்தினார். இது அவரது மூன்றாவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும்.

---

**5. ஆசிய சாம்பியன் இலங்கை**

பாகிஸ்தானை 23 இரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி T20 ஆசியக்கோப்பை சாம்பியன் பட்டத்தை ஆறாவது முறையாக கைப்பற்றியது இலங்கை. துபையில் நடைபெற்ற T20 ஆசியக்கோப்பை இறுதி ஆட்டத்தில் முதலில் ஆடிய இலங்கை அணி 170/6 இரன்களைக் குவித்தது. பானுகா ராஜபட்ச அபாரமாக ஆடி 71 ரன்களை விளாசினார். இரண்டாவதாக ஆடிய பாகிஸ்தான் அணி 147 இரன்களை மட்டுமே எடுத்து தோல்வியைத் தழுவியது. பிரமோத் 4, ஹஸரங்க 3 விக்கெட்டுகளை சாய்த்தனர்.

---

**6. 'தாராகிரி' போர்க்கப்பல் வெள்ளோட்டம்**

இந்திய கடற்படையின், 'புராஜெக்ட் 17ஏ' திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட மூன்றாவது போர்க்கப்பலான, 'தாராகிரி' மும்பையில் முதல்முறையாக கடலில் இறக்கப்பட்டது.

மும்பையில் உள்ள மஸகான் கப்பல் கட்டும் நிறுவனம் சார்பில் ஒருங்கிணைந்த கட்டுமான முறையின்கீழ் இந்தக் கப்பல் கட்டப்பட்டுள்ளது. இதன் இரண்டாம் கட்ட கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு, வரும் 2025–ஆம் ஆண்டு ஆகஸ்டில் இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய கடற்படையின் 'புராஜெக்ட் 17ஏ' திட்டத்தின்கீழ் உள்நாட்டிலேயே 4 போர்க்கப்பல்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன் மொத்த திட்டச் செலவு ₹25,700 கோடியாகும்.

இந்தத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட முதல் போர்க்கப்பலான, 'நீலகிரி' கடந்த 2019–ஆம் ஆண்டு செப்டம்பர்.28–ஆம் தேதி அறிமுகம் செய்யப்பட்டது. இந்தக் கப்பலின் கடல் பயணச்சோதனை வரும் 2024–ஆம் ஆண்டு முதல் பாதியில் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழான இரண்டாவது போர்க்கப்பல், 'உதயகிரி' கட்டி முடிக்கப்பட்டு, கடந்த மே 17–ஆம் தேதி அறிமுகம் செய்யப்பட்டது. இந்தக் கப்பலின் கடல் பயணச்சோதனை 2024–ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் மேற்கொள்ளப்படவுள்ளது.

மூன்றாவதாக உருவாக்கப்பட்ட, 'தாராகிரி' தற்போது வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழான நான்காவது மற்றும் கடைசி போர்க்கப்பலுக்கான அடித்தளம் கடந்த ஜூன் 28–ஆம் தேதி அமைக்கப்பட்டு, கப்பல் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது என்றும் மஸகான் கப்பல் கட்டும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

### 7. SCO மாநாடு: பிரதமர் மோடி உஸ்பெகிஸ்தான் பயணம்

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடி உஸ்பெகிஸ்தான் செல்லவுள்ளார். இதுதொடர்பாக நடுவண் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

உஸ்பெகிஸ்தானில் உள்ள சமர்கண்ட் நகரத்தில் செப்.15, 16–ஆம் தேதிகளில் SCO தலைவர்களின் மாநாடு நடைபெறவுள்ளது. இதையொட்டி பிரதமர் மோடி செப்.15–ஆம் தேதி சமர்கண்ட் செல்கிறார். இந்த மாநாட்டில் SCO உறுப்புநாடுகளின் தலைவர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொள்கின்றனர்.

இந்த மாநாட்டின்போது கடந்த இருபது ஆண்டுகளாக SCO அமைப்பின் செயல்பாடு குறித்து தலைவர்கள் ஆய்வு மேற்கொள்வர் எனவும், எதிர்காலத்தில் பலதரப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசிப்பர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பிராந்திய மற்றும் உலகளவில் முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்தும் மாநாட்டில் விவாதிக்கப்படும் என கருதப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**1. 'தேசிய பாதுகாப்பு MSME மாநாடு மற்றும் கண்காட்சி'யை நடத்துகிற இந்திய நகரம் எது?**




அ. காந்தி நகர்

ஆ. பெங்களூரு

**இ. கோட்டா ☑**

ஈ. விசாகப்பட்டினம்

✓ இரண்டு நாள் நடைபெறும் தேசிய பாதுகாப்பு MSME மாநாடு மற்றும் கண்காட்சியானது சமீபத்தில் இராஜஸ்தானின் கோட்டாவில் தொடங்கப்பட்டது. ராஜஸ்தான் மாநிலத்தில் முதன்முறையாக இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. T–90 மற்றும் BMP–2 டாங்கிகள், பீரங்கி துப்பாக்கிகள், கனரக துப்பாக்கிகள் மற்றும் இயந்திர துப்பாக்கிகள் உட்பட பல்வேறு பாதுகாப்பு உபகரணங்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு துளிர் நிறுவல்கள் மற்றும் MSMEகள் தங்கள் தயாரிப்புகளை இதில் காட்சிப்படுத்துகின்றன.

**2. 2022 – அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியின் வெற்றியாளர் யார்?**



அ. காஸ்பர் ரூட்

**ஆ. கார்லோஸ் அல்கராஸ் ☑**

இ. நோவக் ஜோகோவிச்

ஈ. ரஃபேல் நடால்

✓ ஸ்பானிய டென்னிஸ் வீரர் கார்லோஸ் அல்கராஸ் அமெரிக்க ஓபன் இறுதிப்போட்டியில் நார்வேயின் காஸ்பர் ரூட் என்பவரை வீழ்த்தி தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார். அமெரிக்க ஓபன் இறுதிப்போட்டியில் தோன்றிய முதன்முறையிலேயே, உலக தரவரிசையில் முதலிடத்திற்கு அவர் உயர்ந்துள்ளார். 19 வயதான கார்லோஸ் அல்கராஸ், ஆறு ATP சுற்றுகள் ஒற்றையர் பட்டங்களையும் இரண்டு மாஸ்டர்ஸ் 1000 பட்டங்களையும் வென்றுள்ளார்.

**3. 'பர்வத் பிரஹார்' என்ற பயிற்சியை நடத்திய இந்திய ஆயுதப்படை எது?**



அ. இந்திய விமானப்படை

**ஆ. இந்திய இராணுவம் ☑**

இ. இந்திய கடற்படை

ஈ. இந்தோ–திபெத்திய எல்லைக் காவல்படை

✓ இந்திய இராணுவம், 'பர்வத் பிரஹார்' என்ற பெயரில் 20 நாள் பயிற்சியை நடத்தி வருகிறது. இது இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையேயான ஒப்பந்த விடுவிப்பு செயல்முறைக்கு இடையே, கோக்ரா–ஹாட் ஸ்பிரிங்ஸ் பகுதியில் மெய்யெல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் (LAC) நடத்தப்படுகிறது. இந்திய இராணுவத்தளபதி மனோஜ் பாண்டே, 'பர்வத் பிரஹார்' பயிற்சியை ஆய்வுசெய்தார். இந்தியா மற்றும் சீனாவின் கார்ப்ஸ் கமாண்டர்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த ஒப்பந்த விடுவிப்பு செயல்முறை நடைபெறுகிறது.

**4. 2022 – சர்வதேச பால்வளக் கூட்டமைப்பின் உலக பால் உச்சிமாநாடு (IDF WDS) நடைபெற்ற இடம் எது?**

அ. வாரணாசி

**ஆ. நொய்டா பெருநகரம் ☑**

இ. அமிர்தசரஸ்

ஈ. நைனிடால்

- ✓ பிரதமர் மோடி, நொய்டா பெருநகரத்தில் நடப்பு 2022ஆம் ஆண்டுக்கான சர்வதேச பால்வளக் கூட்டமைப்பின் உலக பால் உச்சிமாநாட்டைத் தொடங்கிவைத்தார். உலகத்தின் பாலுற்பத்தியில் 23 சதவீதம் இந்தியாவின் பால் உற்பத்தித் தொழிற்துறையின்மூலம் பெறப்படுகிறது. இந்தியா, கடந்த 2014ஆம் ஆண்டில் 146 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்துள்ளது. இது தற்போது 210 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது. அதாவது சுமார் 44 சதவீதம் அதிகரிப்பாகும்.

**5. இந்தோ–பசிபிக் பொருளாதாரக்கட்டமைப்பின் எந்தப் பிரிவிலிருந்து இந்தியா அண்மையில் வெளியேறியது?**

அ. நியாயமான பொருளாதாரப் பிரிவு

**ஆ. வர்த்தகப் பிரிவு ☑**

இ. தூய பொருளாதாரப் பிரிவு

ஈ. விநியோகச் சங்கிலிப் பிரிவு

- ✓ அமெரிக்கா தலைமையிலான இந்தோ–பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பின் (IPEF) வர்த்தகம் தொடர்பான பேச்சுவா–ர்த்தைகளிலிருந்து இந்தியா வெளியேறியது. நடுவண் வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல், IPEF–இன் வர்த்தகப் பிரிவில் இணையாத இந்தியாவின் முடிவை உறுதிப்படுத்தினார். IPEF அமைச்சர்கள் சந்திப்பு ஆனது அண்மையில் அமெரிக்காவால் நடத்தப்பட்டது.

**6. அண்மைய தரவுகளின்படி, உணவு தானிய உற்பத்தியில் நாட்டில் முதலிடம் வகிக்கின்ற மாநிலங்கள் எவை?**

அ. பஞ்சாப் மற்றும் உத்தரபிரதேசம்

**ஆ. பஞ்சாப் மற்றும் ஹரியானா ☑**

இ. ஆந்திரா மற்றும் மேற்கு வங்கம்

ஈ. பஞ்சாப் மற்றும் மேற்கு வங்காளம்



- ✓ சமீபத்திய தரவுகளின்படி, உணவு தானிய உற்பத்தி மற்றும் விளைச்சலில் பஞ்சாப் மற்றும் ஹரியானா முதலிடத்தில் உள்ளன. உத்தர பிரதேசம் மற்றும் சில மேற்கு மற்றும் தென் மாநிலங்களில் உணவு அல்லாத தானியங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன். உணவு தானியத்தில் அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் மற்றும் பிற தானியங்கள் அடங்கும்; அதே சமயம் உணவு அல்லாத தானியங்களுள் எண்ணெய் வித்துக்கள், பருத்தி, கரும்பு மற்றும் சணல் ஆகியவை அடங்கும். ஒடிஸா, மகாராஷ்டிரா, பீகார் ஆகிய மாநிலங்களில் நிகர விதைப்புப் பகுதி குறைந்துள்ள நிலையில், இராஜஸ்தான், குஜராத், உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அது அதிகரித்துள்ளது.

**7. இந்தியாவின் தொட்டுணர முடியா கலாச்சார பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்காக UNESCOஉடன் கூட்டு சேர்ந்துள்ள இந்திய நிறுவனம் எது?**

அ. டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்

**ஆ. இராயல் என்ஃபீல்டு ☑**

இ. ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ்

ஈ. மஹிந்திரா மற்றும் மஹிந்திரா

- ✓ ஐக்கிய நாடுகள் அவையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பும் (UNESCO) இந்தியாவின் முன்னணி மோட்டார் சைக்கிள் நிறுவனமுமான இராயல் என்ஃபீல்டும் இணைந்து இமயமலையில் தொடங்கி இந்தியாவின் தொட்டுணர முடியா கலாச்சார பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமாக கூட்டிணைந்துள்ளன. கடந்த 2003ஆம் ஆண்டில், தொட்டுணர முடியா கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான UNESCOஇன் தீர்மானத்தை ஏற்றுக்கொண்ட 178 நாடுகளுள் இந்தியாவும் ஒன்றாகும்.

**8. பிரதமர் நரேந்திர மோடி, கீழ்க்காணும் எந்த மாநிலத்தில், 'ஹோமி பாபா புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தை'த் திறந்து வைத்தார்?**




அ. குஜராத்

**ஆ. பஞ்சாப் ☑**

இ. மகாராஷ்டிரா

ஈ. தெலுங்கானா

✓ பஞ்சாபின் மொகாலி மாவட்டத்தில், 'ஹோமி பாபா புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தை' பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார். ஹோமி பாபா புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் அனைத்து வகையான புற்றுநோய்களுக்கும் சிகிச்சையளிக்கும் வகையில் அதிநவீன வசதிகளுடன் நிறுவப்பட்டு உள்ளது. டாடா நினைவு மையத்தால் ₹660 கோடி செலவில் இந்த மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது.

**9. இந்தியாவின் முதல் உள்நாட்டு விமானந்தாங்கிக்கப்பலின் (IAC–1) பெயரென்ன?**



அ. விக்ரம்

**ஆ. விக்ராந்த் ☑**

இ. கரிகாலன்

ஈ. இராஜேந்திரன்

✓ இந்தியாவின் முதலாவது உள்நாட்டு விமானந்தாங்கிப் போர்க்கப்பல் (IAC–1) செப்டம்பர்.2ஆம் தேதியன்று பணியில் சேர்க்கப்பட்டதாக இந்திய கடற்படை அறிவித்துள்ளது. கடற்படையின் கூற்றுப்படி, இப்போர்க்கப்பலுக்கு, 'விக்ராந்த்' என்று பெயர்சூட்டப்படும்; மேலும் இது, தேசத்தின் சுய உறுதிப்பாட்டின் சாதனையைக் குறிக்கும். முதன்முதலில் கடந்த 2013 ஆகஸ்டில் அறிவிக்கப்பட்ட இந்தக் கப்பலின், கடல் சோதனைகள் 2021 ஆகஸ்டில் தொடங்கின.

**10. காசநோயை ஒழிப்பதற்காக, எத்தனை பழங்குடி மாவட்டங்கள், மையப்படுத்தப்பட்ட தலையீடுகளுக்காக (focused interventions) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன?**



அ. 25

ஆ. 50

**இ. 75 ☑**

ஈ. 100

✓ நடுவண் பழங்குடியினர் நலத்துறை அமைச்சகமும் நடுவண் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் நடுவண் காசநோய் பிரிவும் இணைந்து, காசநோயை ஒழிப்பதில் முழு கவனம் செலுத்தும் தலையீடுகளுக்காக, 75 பழங்குடியின மாவட்டங்களைத் தெரிவுசெய்துள்ளன. கடந்த 6 மாதங்களாக பழங்குடியின மாவட்டங்களில் உள்ள 68,000–க்கும் மேற்பட்ட கிராமங்களில் வீடுவீடாகச்சென்று நடத்தப்பட்ட காசநோய் பரிசோதனைக்குப் பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

---

## செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. ஜப்பான்–இந்தியா கடல்சார் இருதரப்பு பயிற்சி – ஜிமெக்ஸ் 2022**

ஜப்பான்–இந்தியா கடல்சார் பயிற்சி – ஜிமெக்ஸ் 2022–இன் 6ஆவது பயிற்சி செப்டம்பர்.11ஆம் தேதி வங்கக்கடலில் மேற்கொள்ளப்பட்டது. இந்திய கடற்படை நடத்தும் இப்பயிற்சியில் ஜப்பானின் எஸ்கார்ட் புளோடில்லா ஃபோர்–இன்

கமாண்டர் ரியர் அட்மிரல் ஹிராட்டா டோஷியுக்கி தலைமையில் ஜப்பான் பாதுகாப்பு கப்பல்களும், இந்திய கடற்படையின் கிழக்குப்பிராந்திய கொடி அதிகாரி கமாண்டிங் ரியர் அட்மிரல் சஞ்சய் பல்லா தலைமையில் இந்திய கடற்படை கப்பல்களும் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டன.

இந்தியத்தரப்பில் சகயாத்ரி, ரன்விஜய், ஜோதி ஆகிய உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட கப்பல்கள் இடம்பெற்றன. கடலோர ரோந்துக்கப்பல் சுகன்யா, நீர்மூழ்கிக்கப்பல்கள், எம்ஜஜி 29கே போர் விமானம், மற்றும் ஹெலிகாப்டர்கள் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டன. ஜிமெக்ஸ்–22 கடலிலும், விசாகப்பட்டினம் துறைமுகத்திலும் இரண்டு கட்டங்களாக நடைபெறும். கடந்த 2012ஆம் ஆண்டு ஜப்பானில் தொடங்கப்பட்ட ஜிமெக்ஸ் பயிற்சியின் இந்த அத்தியாயம் பத்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

---

**2. அத்தியாவசிய மருந்துகளின் தேசிய பட்டியல்களை டாக்டர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டார்**

அனைத்து மட்டங்களிலும் கட்டுப்படியான விலையில் தரமான மருந்துகள் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், அத்தியாவசிய மருந்துகளின் தேசிய பட்டியல் முக்கிய பங்காற்றி வருகிறது. இந்தப் பட்டியலில் கூடுதலாக 34 மருந்துகளுடன் 384 மருந்துகள் இடம்பெற்றுள்ளன. முந்தைய பட்டியலிலிருந்து 26 மருந்துகள் நீக்கப்பட்டுள்ளன. 27 சிகிச்சைப்பிரிவுகளுக்கென இந்த மருந்துகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பட்டியல் 1996ஆம் ஆண்டு முதன்முதலாக வகுக்கப்பட்டது. அதன்பின்னர் 2003, 2011, 2015 ஆகிய ஆண்டுகளில் இதற்குமுன்பு மும்முறை திருத்தப்பட்டது.

---

**3. வரும் 15–இல் 'காலை சிற்றுண்டித் திட்டம்' தொடக்கம்: முதல்வர் மு க ஸ்டாலின் தகவல்**

தமிழ்நாட்டில் வரும் 15–ஆம் தேதியன்று 'காலை சிற்றுண்டித் திட்டம்' தொடங்கப்படவுள்ளதாக முதல்வர் மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**காலை உணவுத் திட்டம்:** முன்னாள் முதல்வர் அண்ணாவின் பிறந்தநாள் செப்டம்பர்.15–ஆம் தேதியன்று, அரசு தொடக்கப்பள்ளிகளில் காலைச் சிற்றுண்டி வழங்குகிற புதிய திட்டம் தொடங்கப்படவுள்ளது.

---

**1. அலுவல்பூர்வ தரவுகளின்படி, இந்தியாவில் ஆகஸ்ட் மாதத்தில் இருந்த சில்லறை பணவீக்க சதவீதம் என்ன?**

அ. 6.5%

**ஆ. 7.0% ☑**

இ. 7.5%

ஈ. 8.0%




✓ இந்தியாவின் சில்லறை பணவீக்கம் கடந்த ஜூலை மாதத்தில் 6.71%ஆக இருந்து; அது ஆகஸ்ட் மாதத்தில் 7%ஆக உயர்ந்துள்ளது. நுகர்வோர் விலைக்குறியீட்டு அடிப்படையிலான பணவீக்கம் தொடர்ச்சியாக எட்டாவது மாதமாக ரிசர்வ் வங்கியின் இலக்கு அளவான 6%ஐவிட அதிகமாக உயர்ந்துள்ளது. தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) வெளியிட்ட தொழிற்துறை உற்பத்தி குறியீட்டு (IIP) தரவுகளின்படி, 2022 ஜூலையில் இந்தியாவின் தொழிற்துறை உற்பத்தி 2.4% உயர்ந்துள்ளது; அதே வேளையில், IIP, 2021 ஜூலையில் 11.5% வளர்ந்தது. உணவுப் பணவீக்கம் போன்ற அத்தியாவசியப் பயிர்களின் விலைகள் உயர்ந்தன. கோதுமை, அரிசி மற்றும் பருப்பு வகைகள் அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டன.

**2. FAO மற்றும் உலக உணவுத்திட்டமானது இந்தியாவின் எந்த அண்டை நாட்டில் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை ஏற்படும் என அதனை எச்சரித்தது?**

அ. மியான்மர்

**ஆ. இலங்கை ☑**

இ. நேபாளம்

ஈ. ஆப்கானிஸ்தான்



✓ உணவு மற்றும் உழவு அமைப்பும் (FAO) உலக உணவுத்திட்டமும் (WFP) தனது புதிய அறிக்கையில் இலங்கையில் சுமார் 6.3 மில்லியன் மக்கள் மிதம் முதல் கடுமையான உணவுப்பாதுகாப்பின்மையை எதிர்கொள்ளப்போவதாக எச்சரித்துள்ளன. பயிர் மற்றும் உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டு பணி (CFSAM) அறிக்கை, போதுமான உயிர்காக்கும் உதவி & வாழ்வாதார ஆதரவு வழங்கப்படாவிட்டால், அவர்களின் நிலைமை மோசமாகிவிடும் என எச்சரித்துள்ளது.

**3. நமீபியாவிலிருந்து கொண்டுவரப்படும் சிவிங்கிப்புலிகளை, கீழ்க்காணும் எந்தத் தேசியப்பூங்காவில் விடுவதற்கு இந்திய அரசு திட்டமிட்டுள்ளது?**

**அ. குனோ பால்பூர் தேசியப்பூங்கா ☑**

ஆ. ஜிம் கார்பெட் தேசியப்பூங்கா

இ. இராந்தம்பூர் தேசியப்பூங்கா

ஈ. கசிரங்கா தேசியப்பூங்கா




✓ மத்திய பிரதேசத்தின் குனோ பால்பூர் தேசியப்பூங்காவில் தென்னாப்பிரிக்காவின் நமீபியாவிலிருந்து கொண்டு வரப்படும் சிவிங்கிப்புலிகளை விடுவதற்கு இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. இந்தச் சிவிங்கிப்புலிகள் குனோ பால்பூர் தேசியப்பூங்காவிற்கு வருகைதந்த பிறகு, அவை தனிமைப்படுத்தப்பட்ட அடைப்பு வலைக்குள் சிறுகாலம் தங்க வைக்கப்பட்டு, பின்னர் வழக்கமான வாழ்விடத்திற்கு மாற்றப்படும். கடந்த 1952இல் இந்தியாவிலிருந்த கடைசி சிவிங்கிப்புலியும் இறந்தது. கடந்த 2009ஆம் ஆண்டில், 'இந்தியாவில் ஆப்பிரிக்க சிவிங்கிப்புலி அறிமுகத் திட்டம்' தொடங்கப்பட்டது.

**4. உலகளவில் 50 மில்லியன் மக்கள், 'நவீன அடிமைத்தனத்தில்' சிக்கித் தவிக்கின்றனர் என்று எந்த அமைப்பு தனது அறிக்கையில் கூறியுள்ளது?**

அ. FAO

ஆ. IMF

**இ. ILO ☑**

ஈ. WEF

International Labour Organization

✓ ஐக்கிய நாடுகள் அவையின் பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு (ILO) அறிக்கையொன்றை வெளியிட்டது. அதில், உலகம் முழுவதும் 50 மில்லியன் மக்கள், 'நவீன அடிமைத்தனத்தில்' சிக்கித் தவிக்கின்றனர் எனக் கூறப்பட்டு உள்ளது. கட்டாய உழைப்பு அல்லது கட்டாயத்திருமணம் மற்றும் பிற நெருக்கடிகளில் சிக்கித்தவிக்கும் மக்களின் எண்ணிக்கை அண்மைய ஆண்டுகளில் ஐந்தில் ஒரு பங்காக உயர்ந்து ஒரே நாளில் சுமார் 50 மில்லியனாக அதிகரித்துள்ளது. வாக் ஃப்ரீ அறக்கட்டளையுடன் இணைந்து இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

**5. 2018–19இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், அரசின் சுகாதார செலவினத்தின் பங்கு எவ்வளவு?**



அ. 0.85%

ஆ. 1.01%

**இ. 1.28% ☑**

ஈ. 2.0%

✓ 2018–19ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் தேசிய சுகாதார கணக்குகளின் மதிப்பீடுகளின்படி, நாட்டின் மொத்த GDP–இல் அரசாங்க சுகாதார செலவினங்களின் பங்கில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 2013–14இல் 1.15%ஆக இருந்த பங்கு 2018–19இல் 1.28%ஆக அதிகரித்துள்ளது. 2017–18இல் இது 1.35%ஆக இருந்தது. 2018–19ஆம் ஆண்டில் மொத்த சுகாதார செலவினத்தில் அரசின் சுகாதார செலவினத்தின் பங்கு 40.6%ஆக அதிகரித்துள்ளது.

**6. குஷியாரா ஆற்றின் இடைநிலை நீர் தொடர்பாக, கீழ்க்காணும் எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது?**




**அ. வங்காளதேசம் ☑**

ஆ. நேபாளம்

இ. மியான்மர்

ஈ. பாகிஸ்தான்

✓ இந்தியாவும் வங்காளதேசமும் புது தில்லியில் வைத்து கூட்டாறுகள் ஆணையத்தின் கூட்டத்தை நடத்தின; அதன் சமயம் குஷியாரா ஆற்றின் இடைநிலை நீர் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இரு நாடுகளும் இறுதிசெய்தன. நடுவண் ஜல்சக்தி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 12 ஆண்டு நீண்ட இடைவெளிக்குப் பிறகு இச்சந்திப்பு நடைபெற்றது. திரிபுராவின் சப்ரூம் நகரத்தின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஃபெனி ஆற்றில் நீர் உட்கொள்ளும் பரப்பின் வடிவமைப்பு மற்றும் இருப்பிடம் இறுதிசெய்யப்பட்டதை இருதரப்பினரும் வரவேற்றனர்.

**7. ஒரு புறக்கோளின் வளிமண்டலத்தில் கரியமிலவாயுவைக் கண்டறிந்துள்ள நாடு எது?**



அ. சீனா

**ஆ. அமெரிக்கா ☑**

இ. ஆஸ்திரேலியா

ஈ. இஸ்ரேல்

✓ ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி மற்றொரு சூரிய குடும்பத்தில் உள்ள ஒரு கோளின் வளிமண்டலத்தில் கரியமில வாயுவைக் கண்டறிந்துள்ளது. இந்தக் கண்டுபிடிப்பு புதிய தொலைநோக்கியிலிருந்து வெளியிடப்பட்ட முதல் விரிவான அறிவியல் முடிவை குறிக்கிறது. பூமியைப்போன்ற சிறிய, பாறைக்கோள்களின் வளிமண்டலத்தில் பைங்குடில் வாயுக்களைக் கண்டுபிடிப்பதற்கான புதிய சாத்தியக்கூறுகளையும் இது எடுத்துக்காட்டுகிறது.

**8. மதிப்புமிக்க டைமண்ட் லீக் மீட் பட்டத்தை வென்ற முதல் இந்திய விளையாட்டு வீரர் / வீராங்கனை யார்?**




அ. P V சிந்து

ஆ. தனலட்சுமி

**இ. நீரஜ் சோப்ரா ☑**

ஈ. ஹிமா தாஸ்

✓ டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற நீரஜ் சோப்ரா, லொசேன் டைமண்ட் லீக்கில் ஈட்டியெறிதல் போட்டியில் வெற்றிபெற்றார். 89.08 மீட்டர் தூரம் ஈட்டியெறிந்து, மதிப்புமிக்க டைமண்ட் லீக் மீட் பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றார். லீக் என்பது உயரடுக்கு தடகளப் போட்டிகளின் வருடாந்திர தொடர் நிகழ்வு ஆகும். நீரஜ், சுவிச்சர்லாந்தில் நடக்கும் டைமண்ட் லீக் இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றதோடு, 2023 உலக சாம்பியன்ஷிப்பிற்கும் தகுதிபெற்றுள்ளார்.

**9. வியாஸ் சம்மான் விருது பெற்ற Dr அஸ்கர் வஜாஹத் சார்ந்த மொழி எது?**



அ. உருது

**ஆ. ஹிந்தி ☑**

இ. கன்னடம்

ஈ. குஜராத்தி

✓ 31ஆவது வியாஸ் சம்மான் விருது ஹிந்தி எழுத்தாளர் டாக்டர் அஸ்கர் வஜாஹத்துக்கு புது தில்லியில் வழங்கப்பட்டது. முகலாயப்பேரரசர் அக்பர் மற்றும் கவிஞர் துளசிதாஸ் ஆகியோரை மையமாகக்கொண்ட, 'மகாபலி' நாடகத்திற்காக அவர் இம்மதிப்புமிக்க விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். வியாஸ் சம்மான் என்பது KK பிர்லா அறக்கட்டளையால், கடந்த 10 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட, இந்தியக் குடிமகன் ஒருவரால் ஹிந்தி மொழியில் எழுதப்பட்ட சிறந்த இலக்கியப்பணிக்காக வழங்கப்படுகிற ஒரு விருதாகும்.

**10. 'வஜ்ர பிரஹார்' என்பது இந்தியாவிற்கும் எந்நாட்டிற்கும் இடையே நடைபெறும் ஒரு இராணுவப் பயிற்சியாகும்?**



அ. பிரான்ஸ்

ஆ. ஜப்பான்

**இ. அமெரிக்கா ☑**

ஈ. ஆஸ்திரேலியா

✓ இந்தியா–அமெரிக்காவின் சிறப்புப்படைகள் பங்கேற்கும், '2022 – வஜ்ர பிரஹார்' பயிற்சியின் பதிமூன்றாவது பதிப்பு ஹிமாச்சலப்பிரதேசத்தில் உள்ள பக்லோவில் நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சியில் வான்வழிப் பயிற்சி செயல்பாடுகள், சிறப்பு நடவடிக்கைகள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் பயிற்சிகள் நடத்தப்பட்டன. இந்த ஆண்டு (2022) பயிற்சி இந்தியா மற்றும் அமெரிக்காவால் மாற்றி மாற்றி நடத்தப்படுகிறது. இதன் 12ஆவது பதிப்பு, கடந்த 2021 இல் வாஷிங்டனில் (US) நடத்தப்பட்டது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. முப்படைத் தளபதிகளின் 36ஆவது மாநாடு – தெற்கு போர்ட் பிளேரில் நடைபெற்றது**

முப்படைத் தளபதிகளின் 36ஆவது மாநாடு, 2022 செப்டம்பர்.12,13 ஆகிய தேதிகளில் அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளில் நடந்தது. இந்தியப்பெருங்கடல் பகுதியில் புவியியல் சார்ந்த சாத்தியக்கூறுகள் மற்றும் உட்கட்டமைப்பு, முப்படைகளின் பிராந்திய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், முப்படைகளின் வளர்ச்சியை அதிகரிப்பதற்கான வழிகள் மற்றும் முப்படைகளின் தயார் நிலை குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இந்த மாநாடு, இந்தியாவின் கடல்சார் சேவை, ஒருங்கிணைந்த சேவை, திறன்களின் கூட்டு வலிமையை அதிகரித்தல் உள்ளிட்டவற்றை நோக்கமாகக்கொண்டது. மேலும், தற்கால பாதுகாப்பு முன்னுதாரணங்களை நிவர்த்தி செய்வதில் கவனம் செலுத்தியது. மேலும், போர்த்திறனை மேம்படுத்துவதற்கும், செல்பாடுகளை மிகவும் பயனுள்ளதாக, திறமையாக மாற்றுவதற்கான வழிகள் குறித்தும் ஆய்வுசெய்தது.

---

**2. ககன்யான் திட்டம்: நிகழாண்டில் முதலாவது சோதனை விண்கலம் – ஜிதேந்திர சிங்**

விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தின் ஒருபகுதியாக முதலாவது சோதனை விண்கலம் நிகழாண்டு விண்வெளிக்கு செலுத்தப்படும் என்றார் நடுவண் அமைச்சர் ஜிதேந்திர சிங்.

இதுகுறித்து தில்லியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: ககன்யான் விண்கலத்தை நாட்டின் 75ஆவது விடுதலை நாள் விழா ஆண்டான 2022ஆம் ஆண்டிலேயே விண்வெளிக்கு செலுத்த திட்டமிட்டிருந்தோம். ஆனால், இந்தியாவிலும் ரஷியாவிலும் பயிற்சிபெற்றுவந்த விண்வெளி வீரர்கள் COVID தொற்றால் பாதிக்கப்பட நேர்ந்ததால், இந்தத்திட்டம் தாமதமாகிறது. வரும் 2024–இல் ககன்யான் விண்கலம் விண்வெளிக்கு செலுத்தப்படும்.

இதையொட்டி முதலாவது சோதனை விண்கலம் நிகழாண்டு விண்வெளிக்குச் செலுத்தப்படவுள்ளது. அதனை அடுத்தாண்டு விண்வெளிக்கு அனுப்பப்படவுள்ள, 'வியோம் மித்ரா' என்ற பெண்ணுருவம்கொண்ட ரோபோ கண்காணிக்கும். ககன்யான் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நான்கு விமானிகளை இந்திய விமானப்படை அடையாளம் கண்டுள்ளது. அவர்களுக்கு ரஷியாவில் அடிப்படை பயிற்சியளிக்கப்பட்டது. விண்வெளியின் சுற்று வட்டப்பாதையில் நிலைநிறுத்தப்படும் சோதனை விண்கலத்தின் செயல்பாடுகளைக் கருத்தில்கொண்டு, 2024இல் புவியின் சுற்றுவட்டப்பாதைக்கு 2 விண்வெளி வீரர்களை இஸ்ரோ அனுப்பிவைக்கும் என்றார் ஜிதேந்திர சிங்.

கடந்த 2018 சுதந்திர தின உரையின்போது விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ₹10,000 கோடி மதிப்பிலான ககன்யான் திட்டத்தை பிரதமர் மோடி அறிவித்தார். நிலவுக்கு சந்திரயான்–3 விண்கலத்தை அடுத்த ஆண்டில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

---

**3. சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக எம் துரைசாமி பொறுப்பேற்பு**

சென்னை உயர்நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதியாக எம் துரைசாமி செப்.13 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவிவகித்த வந்த முனீஸ்வர்நாத் பண்டாரி செப்.12 அன்று ஓய்வுபெற்றார். இதைத்தொடர்ந்து, உயர்நீதிமன்றத்தின் மூத்த நீதிபதியான எம் துரைசாமியை பொறுப்பு தலைமை நீதிபதியாக நியமித்து நடுவணரசு உத்தரவிட்டிருந்தது. அதன்படி, உயர்நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதியாக எம் துரைசாமி செப்.13 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். வரும் செப்.21–ஆம் தேதியுடன் நீதிபதி எம் துரைசாமி ஓய்வுபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

---